# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண்.208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை–600 106
தொலைபேசி எண் : 2363 5010, 2363 5011 நிகரி : 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் – tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in


## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு எண் 14/2019 நாள் 11.12.2019

### தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

**சாதாரண உள்ளாட்சித் தேர்தல்–2019**

சென்னை, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய கூட்டரங்கில் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர் இரா.பழனிசாமி,இ.ஆ.ப.(ஓய்வு) அவர்கள் உள்ளாட்சித் தேர்தல் நடைபெற உள்ள 27 தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சியர் ஆகியோருடன் சாதாரண உள்ளாட்சித் தேர்தல்–2019க்காக மேற்கொள்ளப்பட்டு வரும் ஏற்பாடுகள் குறித்து காணொலி காட்சி (Video Conferencing) வழியாக 10.12.2019 அன்று ஆய்வு மேற்கொண்டார்கள்.

- தேர்தல் நடத்தை விதிகள் அமல்படுத்துதல்;
- பறக்கும்படை, இணையவழி கண்காணிப்பு, வீடியோ ஒளிப்பதிவு செய்தல்; நுண்பார்வையாளர்கள் மூலமாக தேர்தல் நடத்தை விதிகளை நடைமுறைப்படுத்துதல்;
- மாவட்ட அளவில் தேர்தல் பொறுப்பு அலுவலர்களை நியமித்தல்;
- தேதிவாரியாக செயல்திட்டத்தினை தயாரித்தல்;
- அனைத்துக்கட்சிக் கூட்டத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர், தேர்தல் அலுவலர் நடத்துதல்;
- வாக்குச்சாவடி அலுவலர்களை நியமனம் செய்தல்;
- வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான பயிற்சிகள் அளித்தல்;
- துணை வாக்காளர் பட்டியலில் வாக்காளர்களை சேர்த்தல் மற்றும் நீக்குதல் ;
- கட்சி சார்ந்த தேர்தலுக்கான வாக்குச் சீட்டு அச்சிட அச்சகத்தை தேர்ந்தெடுத்தல்;
- வாக்குப்பெட்டி மற்றும் வாக்குச்சாவடிக்கான பொருட்களை கொண்டு சேர்த்தல் மற்றும் வாக்குப்பதிவுக்கு தயாராகுதல்;
- மாவட்ட தேர்தல் பார்வையாளர்கள்;
- பதட்டமான மற்றும் பிரச்சினைக்குரிய வாக்குசாவடிகளை கண்டறிதல் மற்றும் காவல்துறை அலுவலர்களுடன் கலந்தாலோசித்தல்;
- தமிழ் நாடு மாநில தேர்தல் ஆணைய இணையதளத்தில் வேட்புமனு தாக்கல் முதல் தேர்தல் முடிவு அறிவித்தல் வரையிலான புள்ளிவிபரங்களை பதிவேற்றம் செய்தல்;
- வாக்குச்சாவடி மற்றும் வாக்கு எண்ணிக்கை மையங்கள் அமைத்தல் தொடர்பான முன்னேற்பாட்டு பணிகள்;
- வேட்பாளர் செலவினம் தொடர்பான விலைப் பட்டியல் நிர்ணயித்தல்

ஆகியவை தொடர்பான அறிவுரைகள் வழங்கியும், ஆலோசனைகளும் கேட்டறியப்பட்டன.

தேர்தல் நேர்மையாகவும் ஜனநாயக முறையிலும் நடைபெறுவதை உறுதிசெய்ய அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டது.

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)

11/12/19

மக்கள் தொடர்பு அலுவலர்